சேலம் மத்திய மாவட்டத்தில் நாம் தமிழர் கட்சியின் சேலம் நாடாளுமன்ற தொகுதி செயலாளர். பால சுப்பிரமணியன் தலைமையில் 200 பேர். அக்கட்சியை விட்டு விலகி மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் இரா. இராஜேந்திரன் முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் மாவட்டப் பொருளாளர் மு.கார்த்திகேயன். தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சி.ராஜேந்திரன், தாமரைக் கண்ணன், மாநகர செயலாளர். பா.ரகுபதி ஆகியோர் இருந்தனர்.

அமெரிக்க அதிபராக டிரம்ப் இன்று பதவியேற்பு!

வாஷிங்கடன், ஜன.20-

நடந்து முடிந்த அமெரிக்கா அதிபர் தேர்தலில், ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த கமலா ஹாரிஸை வீழ்த்தி, குடியரசு கட்சி வேட்பாளர் டொனால்ட் டிரம்ப் வெற்றி பெற்று அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அமெரிக்காவின் 47வது அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டிரம்ப், இன்று (ஜனவரி 20ஆம் தேதி) அமெரிக்கா அதிபராக பதவியேற்கிறார். 2வது முறையாக அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட

டொனால்ட் டிரம்ப், தான் பதவியேற்ற பின்னர் என்னென்ன மாற்றங்கள் மற்றும் திட்டங்கள் செய்யப்படும் என்று தேர்தலில் வெற்றி பெற்றதில் இருந்து ஒவ்வொரு நாளும் டொனால்ட் டிரம்ப் அறிவித்து வருகிறார்.

டொனால்ட் டிரம்ப் போடு, ஜே.டி.வானஸ் என்பவர் துணை அதிபராக பதவியேற்கவுள்ளார். உலகின் தலைசிறந்த நாடாக பார்க்கப்படும் அமெரிக்காவில் இரண்டாவது முறையாக அதிபராகடொனால்ட் டிரம்ப் பதவியேற்கும் விழாவில் உலகெங்கிலும் உள்ள பல தலைவர்கள் பங்கேற்க இருக்கின்றனர்.

அந்த வகையில், இந்தியா சார்பில் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், அதிபர் பதவியேற்கும் விழாவில் பங்கேற்க இருக்கிறார். இந்த நிகழ்ச்சியின் போது டிரம்ப் நிர்வாகத்தில் உள்ள பிரதிநிதிகள் மற்றும் பல்வேறு வெளிநாட்டு தலைவர்களுடன் ஜெய்சங்கர் பேச்சு வார்த்தை நடத்த இருப்பதாக தகவல் வெளியாகியிருந்தது. டொனால்ட் டிரம்ப் பதவியேற்பு விழாவுக்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர், ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் சு.முத்துசாமி வழிகாட்டுதலின் படி ஊத்துக்குளி மத்திய ஒன்றிய கழகத்தின் சார்பில் பவர் ஹவுஸ் பகுதியில் அமைந்துள்ள அலுவலகம் முன்பு ஒன்றியச் செயலாளர் வி.ராஜா ஏற்பாட்டில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழாவில் ஈரோடு பாராளுமன்ற உறுப்பினர், கழக இளைஞர் அணி துணை செயலாளர் கே.இ.பிரகாஷ், முன்னாள் அமைச்சர் தோப்பு என்.டி.வெங்கடாசலம் ஆகியோர் பொதுமக்களுக்கு சமத்துவ பொங்களை வழங்கி மாணவ, மாணவியர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இதில் ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

சென்னை கிழக்கு மாவட்டத்தில்

மக்கள் தேவைகள் தீர்க்கும் பயணம் - நிகழ்ச்சிகள் விவரம்

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, ஜன. 20 -

சென்னை மாநகராட்சி மேயர் பிரியாராஜன் தலைமையில் சென்னை கிழக்கு மாவட்டத்திற்குட்பட்ட 44 மாநகராட்சி வார்டுகளில் அமைப்பு ரீதியாக உள்ள 83 வட்டங்களில் பாகவாரியாக மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அதிகாரிகள், கழக நிர்வாகிகள் ஆகியோருடன் வீதிவீதியாக பொதுமக்களை சந்தித்து மக்கள் தேவைகளை கண்டறியும் நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக பின்வரும் விவரப்படி நடைபெறுகிறது என மாவட்ட செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் பி.கே.சேகர்பாபு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கொளத்தூர் கிழக்குப் பகுதி

வார்டுகள் 67 - 67 அ

இன்று (20.1.1025 – திங்கள்) காலை 7 மணி முதல்

20.1.2025 திங்கள் – 164, 165, 149, 157, 148

21.1.2025 செவ்வாய் – 141, 142, 143

22.1.2025 புதன் – 125, 126, 140

வார்டுகள் 70 - 70 அ

20.1.2025 திங்கள் 136, 134, 133,

21 – 1.25 செவ்வாய் – 132, 135, 171, 170 ஆகிய பாகங்களில் மக்கள் குறை கேட்கிறார்.

அம்பத்தூர் கிழக்குப் பகுதி

வார்டு 83 - 83 அ

20.1.2025 திங்கள்– 51–வது பாகம்,

21.1.2025 செவ்வாய் – 52 –வது பாகத்தில்

22.1.2025 புதன் – 59 ,60 பாகங்களில்

23.1.2025 வியாழன் – 45,46 பாகங்களில்

24.1.2025 வெள்ளி –

37, 38 பாகங்களில்

25.1.2025 சனிக்கிழமை – 61,62 பாகங்களில்

வார்டுகள் 84 - 84 அ

20.1.2025 – 186, 187

21.1.2025 செவ்வாய் 195. 196 பாகங்களில்

22.1.2025 புதன் – 188 பாகங்களில்

23.1.2025 வியாழன் – 197, 198

24.1.2025 வெள்ளி – 175, 176 பாகங்களில்

25.1.2025 சனிக்கிழமை – 199, 200 பாகங்களில்

29.01.2025 புதன் – 201 ஆகிய பாகங்களில்

திரு.வி.க.நகர் தெற்குப் பகுதி

வார்டுகள் 76 - 76 அ

20.1.2025 வெள்ளி – 194, 195, 199, 200

22.1.2025 புதன் – 201, 202, 203

24.1.2025 வெள்ளி – 204, 205 ஆகிய பாகங்களில் மக்களை தேவைகள் தீர்க்கும் பயணம் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

மேற்கண்ட மக்கள் தேவைகள் அறியும் பயணத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள், மண்டல குழு தலைவர்கள். பகுதி கழக செயலாளர்கள். வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள் அந்தந்த பாகத்திற்குட்பட்ட பி.எல்.ஏ.பி.எல்.சி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார்.

மாமன்ற உறுப்பினர் பரிதி இளம் சுருதி நிகழ்ச்சி ஏற்பாட்டில்

எழும்பூர் 99வது வார்டில் சமத்துவ பொங்கல் விழா!

210 பணியாளர்களுக்கு நல உதவிகள்!

சென்னை,ஜன.20-

முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க துணை முதலமைச்சர் அண்ணன் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படி அமைச்சர் சென்னை கிழக்கு மாவட்ட செயலாளர் பி. கே. சேகர்பாபு வழிகாட்டுதலின்படி எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு எம்.சி ஆலோசனைப்படி தி.மு.க. அயலக அணி மாநில துணைச் செயலாளர் மற்றும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99வது வார்டு மாநகராட்சி மன்ற உறுப்பினர் பரிதிஇளம்சுருதி ஏற்பாட்டில் எழும்பூர் சட்டமன்றத் தொகுதி 99வது வார்டுக்கு உட்பட்ட சுந்தரம் பிள்ளை தெருவில் உள்ள சென்னை நடுநிலைப்பள்ளியில் சமத்துவ பொங்கல் விழா கொண்டாடப் பட்டது.

இதில் 99வது வார்டில் பணியாற்றும் அனைத்து சேவை துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்களுடன் பொங்கல் வைத்து அவர்களுக்கு விளையாட்டு போட்டிகள் நடத்தி வெற்றி பெற்றோருக்கு பரிசுகள் வழங்கினார். மற்றும் 210 பணியாளர்களுக்கு பொங்கல் தொகுப்புகள் அரிசி, பாசிப்பருப்பு, வெள்ளம், முந்திரி, திராட்சை, ஏலக்காய், நெய், மற்றும் புத்தாடைகள் வழங்கினார்.

சென்னை தென்மேற்கு மாவட்டம் மயிலை கிழக்கு பகுதி 171 வது வட்டத்தில் பொங்கல் விழா, திருவள்ளுவர் தினத்தை முன்னிட்டு வட்டச் செயலாளர் துரை பார்த்திபன் தலைமையில் கோலப்போட்டி மற்றும் மரம் நடுவிழா 15.1.2025 அன்று டாக்டர் எம்ஜிஆர் ஜானகி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. விழாவினை பார்வையிட்டு பரிசு வழங்கினார். இதில் பகுதிச் செயலாளர் எஸ். முரளி, கீதா முரளி எம்.சி., பசுமை மூர்த்தி, மயிலை வேலு சம்மந்தன், செல்வி சவுந்தரராஜன், எஸ். சரவணன், கணேஷ் பாண்டியன், ஆர்.கதிரவன் வட்டச் செயலாளர்கள் ஏ.தாஸ், மா.பா.அன்பு, வெற்றிவேல், டி.ராஜவேலு, சி.கிருஷ்ணமூர்த்தி, பானு சலீம், தாஸ், குமாரி, ப்ரவீன் பாபு, சபானாள், எம்.கே.பி. மணிமாறன், அருண் ராமஜெயம், வெங்கடேசன், சுசிலா துரைராஜ், முகமது காசிம், அனீஸ், கார்த்திக், செங்குட்டுவன், மா. டில்லி, டி.ஜெகதீஷ் பாபு, வி.கார்த்தி, ஆர்.எஸ். மனோகர், காசி பாண்டியன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர். இறுதியில் ஜே. அசோக்குமார், ஆர். ராமகிருஷ்ணன், உ. கலை செல்வி, ஆர்.சிவன், கிரி எஸ்பி ராஜா, பி .சாம்பவி ஆகியோர் நன்றி கூறினர்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர்

உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டம்!

ஆர்.எஸ்.பாரதி - சூரியா வெற்றி கொண்டான் - டி.பி.எம்.மைதீன்கான் சிறப்புரை!

நெல்லை.ஜன.20-

கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாள் இளைஞர்களின் எழுச்சி நாள் முன்னிட்டு பாளை பகுதி கழகம் சார்பில் நாளை 21ஆம் தேதி மாலை 6 மணிக்கு நெல்லை பாளையங் கோட்டை பேருந்து நிலையம் எதிரில் உள்ள ஜோதிபுரம் திடலில் மாபெரும் பொதுக் கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக சட்டத்துறை இணைச் செயலாளர் தலைமை கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றி கொண்டான்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம். மைதீன்கான் ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றுகின்றனர்.

கழக இளைஞர் அணி செயலாளர் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48வது பிறந்த நாளை முன்னிட்டு பாளையங்கோட்டை பகுதி கழகத்தின் சார்பில் நாளை 210125 ம் தேதி மாலை 6 மணிக்கு பாளையங்கோட்டை பேருந்து நிலையம் எதிரில் உள்ள ஜோதிபுரம் மைதானத்தில் வைத்து மாபெரும் பொதுகூட்டம் மாவட்ட வழக்கறிஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் அருள் மாணிக்கம் தலைமையில் பிரான்சிஸ், அலிஃப் மீரான், மகாகிப்ட்சன்,வில்சன் மணித்துரை,முகமது கமாலுதீன், பலராமன், வல்லநாடு முத்து, சௌந்திரம்,பார்வின்,ஆனி ராக்லண்ட்,நர்மதா திலக் ஆகியோர் முன்னிலையில்நடைபெறுகிறது. மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் மைக்கேல் ராஜேஷ் வரவேற்புரையாற்றுகிறார்.

இந்நிகழ்வில் கழக அமைப்பு செயலாளர் ஆர். எஸ்.பாரதி,கழக சட்டத் துறை இணை செயலாளர் தலைமை கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றி கொண்டான்,நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் டி.பி.எம்.மைதீன்கான், நெல்லை மாநகர கழக செயலாளர் சு.சுப்பிரமணியன், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப், பாளையங்கோட்டை சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மாநில நெசவாளர் அணி துணை செயலாளர் வசந்தம் ஏசி ஜெயக்குமார்,நெல்லை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் மாநில வர்த்தக அணி இணை செயலாளர் ச.முத்துச்செல்வி ஆகியோர் சிறப்புரை ஆற்றுகின்றனர்.

நிகழ்வில் பகுதி செயலாளர்கள் தச்சை பூ.சுப்பிரமணியன், மேலப்பாளையம் சாகுல் ஹமீது,நெல்லை பேட்டை நமச்சிவாயம் கோபி,தலைமை செயற்குழு உறுப்பினர்கள் பேச்சி பாண்டியன், ஏ. எல். எஸ் லெட்சுமணன்,மாநகராட்சி மேயர் கோ.ராம கிருஷ்ணன்,துணை மேயர் கே. ஆர். ராஜு, பாளை மண்டல தலைவர் பிரான்சிஸ்,மாநில நிர்வாகிகள் சுப.சீதாராமன், சொ.பெருமாள்,மாலை ராஜா, விஜிலா சத்யானந்த்,ராஜா முகமது, ராஜ் வர்மன், மாவட்ட நிர்வாகிகள் வி. கே.முருகன்,எஸ்.வி.சுரேஷ், ஆ.தர்மன்,கிரிஜா குமார், வண்ணை சேகர், மாநகர நிர்வாகிகள் அப்துல் கையூம், மூளிகுளம் பிரபு, சுதா மூர்த்தி,பூக்கடை அண்ணாதுரை, வட்ட செயலாளர்கள் பத்மராஜ், ரகுமதுல்லா, எம். எஸ். ராஜ், கோட்டூர் செய்யது,மனோகரன்,தளவாய், அருள் இளங்கோ,பேபி கோபால், ஜெயின் உசைன், ஆவின் கல்யாணி,பால மகேஷ், பெர்க்மான் பாஸ்கர் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொள்கிகின்றனர்.

நிகழ்ச்சி நிறைவில்32வது வட்ட கழக செயலாளர் கதிரேசன் நன்றியுரையாற்றுகிறார்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை பாளையங்கோட்டை பகுதி கழக செயலாளர் அன்டன் செல்லத்துரை செய்துள்ளார்.

திருவாரூரின் 4 தொகுதிகளையும் வென்று கழகத் தலைவரிடம் சமர்ப்பிப்போம்!

திருவாரூர் மாவட்டக் கூட்டத்தில் கழகத்தினர் உறுதி!

திருவாரூர், ஜன. 20-

திருவாரூர் மாவட்ட செயல்வீரர்கள் கூட்டம் மாவட்ட அவைத்தலைவர் க.தன்ராஜ் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் தீர்மானங் களை விளக்கி பேசினார். மாவட்ட துணை செயலாளர்கள் எம்.எஸ்.கார்த்திக், சாந்தி பாஸ்கர், பொருளாளர் மு. வெங்கடேசன் ,தொகுதி தேர்தல் பார்வையாளர்கள் காமராஜ், ராஜா சீனிவாசன், ஜெகவீர பாண்டியன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஞானசேகரன் ஆகியோர் முன்னிலை ஏற்றனர். கூட்டத்தில் பேசிய அனைவரும் திருவாரூர் மாவட்டத்தின் சார்பில் திருவாரூர் ,மன்னார்குடி , நன்னிலம் ,திருத்துறைப் பூண்டி உள்ளிட்ட நான்கு தொகுதிகளையும் வென்று கழக தலைவர் திராவிட நாயகர் தளபதி அவர்களிடம் சமர்ப்பிப் போம் அதற்கான தேர்தல் பணிகளை மேற்கொள் வோம் என் உறுதி ஏற்றனர்

கூட்டத்தில் முதுபெரும் தமிழறிஞர்களின் எண்ணங்களின்படி மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப் பட்டிருக்கும் தை முதல் நாள் தமிழ் புத்தாண்டு மற்றும் தைப்பொங்கல் விழாவினை திராவிட நாயகர் தமிழ்நாடு முதல்வர் கழக தலைவர் தளபதியார் அவர்களின் அறிவுறுத்தலின்படி, மாவட்டம் முழவதும் கழக கொடி ஏற்றி இனிப்புக்கள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவது, தலைமை கழக அறிவுறுத்தலுன்படி நான்கு தொகுதிகளுக் குட்பட்ட வாக்குசாவடிகளுக்கும் பூத்கமிட்டி உறுப்பினர்களின் விபரங்களை சரிபார்த்து உடனடியாக சமர்ப்பிப்பது உள்ளிட்ட தீர்மானங்களும் , மறைந்த முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் உள்ளிட்டோருக்கு இரங்கலும் தெரிவிக்கப்பட்டது.

கூட்டத்தில் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள் பங்கேற்றனர். நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் நன்றி கூறினார்.

சென்னை தென்மேற்கு மாவட்டம், பிள்ளையார் கோவில் தோட்டம், கழக மூத்த முன்னோடி வி.குப்புசாமி அவர்களின் மனைவியும் முன்னாள் பகுதிப் பிரதிநிதி கே.ஆனந்தவேலின் தாயாருமான கே.சந்தானலட்சுமி அவர்களின் படத்திறப்பு நிகழ்ச்சி 18.1.2025 – சனிக்கிழமை அன்று மாலை 6.30 மணியளவில் பிள்ளையார் கோவில் தோட்டம், ஆர்.கே.மடம் சாலை மயிலாப்பூரில் நடைபெற்றது. இதில் அன்னாரின் திருவுருவப்படத்தை சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி., மயிலை கிழக்கு பகுதி செயலாளர் எஸ்.முரளி, மயிலை மேற்குப் பகுதி செயலாளர் நந்தனம் கி.மதி எம்.சி., ஆகியோர் திறந்து வைத்தனர். 124 (அ) வட்ட பொறுப்பாளர் மா.பா.அன்பு, விமலா கிருஷ்ணமூர்த்தி எம்.சி., கீதாமுரளி, அ.ரேவதி, சென்னை தென்மேற்கு – மயிலை கிழக்குப் பகுதி மாவட்ட பிரதிநிதி மூ. உதயசூரியன், ஸ்டோன் அருண்குமார், 124 [அ] வட்ட கழக நிர்வாகிகள் கு. வீரபத்திரன் (அவைத் தலைவர்], மு. சரவணன், ஹி. நதியா, பிரஸ் கே.ரவிகுமார், ஏ.அல்ராஜ், டி.ரூப்நாத், பி.சுந்தர், ஆ.யோகேஸ்வரன், பி.ஆர். அருண்குமார் மற்றும் மாநில, மாவட்ட, பகுதி, வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி, வட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், வட்ட நிர்வாகிகள், பாக முகவர்கள் மற்றும் கழக உடன்பிறப்புக்கள் அனைவரும் கலந்து கொண்டனர்.

நைஜீரியாவில் பெட்ரோல்

லாரி வெடித்து விபத்து! தீயில் கருகி 60 பேர் பலி!

அபுஜா,ஜன.20-

நைஜீரியாவின் தலைநகர் அபுஜாவையும் வடக்கு நகரமான கடுனா நகருடன் இணைக்கும் சந்திப்பில் 60,000 லிட்டர் பெட்ரோலுடன் சென்ற கொள்கலன் லாரி தடம்புரண்டு விபத்தானது. கொள்கலன் லாரி கவிழ்ந்து விபத்தானதை யறிந்த அப்பகுதி மக்கள், பெட்ரோலுக்காக முண்டியடித்துச் சென்றனர்.

இந்தச் சமயத்தில், லாரி கவிழ்ந்து வெடித்தது. பெட்ரோலைச் சேகரிப்பதற்காகக் கூடியிருந்த சுமார் 60க்கும் மேற்பட்டோரும் இந்த விபத்தில் பலியாகினர். விபத்தில், பலரும் அடையாளம் காணமுடியாத அளவுக்கு தீயில் கருகியதாகவும், பலரும் காயமடைந்தாக அந்நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாக நைஜீரியா ஆளுநர் உமாரு பாகோ கூறினார்.